PAPER – I

(COMMON FOR ALL SUBJECTS)

Note : This paper contains sixty (60) multiple choice questions, each question carrying two (2) marks. Attempt any fifty (50) questions.

குறிப்பு : இவ்வினாத்தாள் பல வேறுபட்ட விடைகளை (multiple choice) உடைய அறுபது (60) வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள். ஏதேனும் ஐம்பது (50) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. Team teaching has the potential to develop
   (A) Competitive spirit
   (B) Co-operation
   (C) The habit of supplementing the teaching of each other
   (D) Highlighting the gaps in each other's teaching

   குழுக் கற்பித்தல் வாயிலாக எந்தப் பண்பு வளர்க்கப்படுகிறது?
   (A) போட்டித் திறன்
   (B) ஒற்றுமை
   (C) பிற ஆசிரியரின் கற்பித்தலுடன் சேர்ந்து கற்பிக்கும் பழக்கம்
   (D) பிறர் கற்பித்தலில் உள்ள குறைகளை வெளிப்படுத்துதல்

2. Which of the following is the most important characteristic of open book examination?
   (A) Students become serious
   (B) It improves attendance in the class room
   (C) It reduces examination anxiety
   (D) It compels students to think

   பின்வருவனவற்றில் எது திறந்த நூல் தேர்வின் மிக முக்கியமான இயல்பாகும்?
   (A) மாணவர்கள் அதிக சிரத்தையுடன் ஈடுபடுகின்றனர்
   (B) வகுப்பறையில் மாணவர் வருகையை மேம்படுத்துகிறது
   (C) மாணவர்களிடையே தேர்வுப் பதட்டம் குறைகிறது
   (D) மாணவர்களை சிந்திக்கத் தூண்டுகிறது

3. The present annual examination system
   (A) Promotes rote learning
   (B) Does not promote good study habits
   (C) Does not encourage students to be regular to classes
   (D) All the above

   இன்றைய கால கட்டத்தில் ஆண்டுத் தேர்வு முறையானது
   (A) மனப்பாடம் செய்தலை வளர்க்கிறது
   (B) நல்ல படிப்பு பழக்கத்தை வளர்ப்பதில்லை
   (C) மாணவர்கள் வகுப்பிற்கு தவறாமல் வருவதற்கு ஊக்குவிப்பதில்லை
   (D) மேற்கூறிய அனைத்தும்

4. Effective writing depends on

(A) Voracious reading made again and again

(B) Right vocabulary, idioms and phrases

(C) Felicity of expression and appropriate diction

(D) Clarity, readability and content

சிறப்பாக எழுதுவதென்பது எதைச் சார்ந்திருப்பது?

(A) மேலும் மேலும் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம்

(B) பொருத்தமான சொற்கள், மரபுத் தொடர் மற்றும் சொற்றொடர்

(C) பிரளவமான சொல் வெளிப்பாடு மற்றும் பொருத்தமான சொல்வளம்

(D) தெளிவு, வாசிப்பதில் எளிமை மற்றும் பொருள்

5. A dissertation is meant for perusal by

(A) Great scholars and serious readers

(B) A learned audience that is familiar with the latest developments and discoveries in the subject

(C) Research students and others who want to pursue research

(D) University and college professors

ஆராய்ச்சிக் கட்டுரை என்பது எவரால் படிக்கப்படுகின்றது?

(A) சிறந்த அறிஞர்கள் மற்றும் ஆழ்ந்து படிப்பவர்கள்

(B) ஒரு துறையில் அண்மையில் உண்டான வளர்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளைப் பற்றி நன்கு கற்று அறிந்தவர்கள்

(C) ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி செய்பவர்கள்

(D) பல்கலைக் கழக மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள்

6. What is plagiarism?

(A) A serious discussion of a valid point in a research work

(B) To take words and ideas from someone else's work without acknowledgement

(C) To steal books from a locked house

(D) It is a form of stylish writing

இலக்கியத் திருட்டு என்றால் என்ன?

(A) ஓர் ஆராய்ச்சி செயலில், ஒரு முக்கியமான கருத்து பற்றித் தீவிரமாக கலந்துரையாடுதல்

(B) அனுமதியில்லாமல் மற்றவர் நூல்களிலிருந்து சொற்களையும், கருத்துக்களையும் கையாளுதல்

(C) பூட்டி இருக்கும் வீட்டிலிருந்து நூல்களைத் திருடுவது

(D) ஒரு விதமான, ஒயிலான எழுத்து நடை

7. Interpersonal communication involves the following

(A) Close proximity of participants to each other, large number of participants, many sensory channels and immediate feedback

(B) Small number of participants, close proximity of participants and immediate feedback

(C) Small number of participants, close proximity of participants, few sensory channels and immediate feedback

(D) Small number of participants, close proximity of participants, many sensory channel and feedback in phases

நேரிடைத் தகவல் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

(A) தொடர்பு கொள்வோர் ஒருவருக்கொருவர் அருகாமையில் உள்ளனர்; அதிகமான பங்கேற்போர்; பலபுலன் வழிகள்; உடனடி பின்னூட்டு

(B) குறைந்த அளவு பங்கேற்போர்; தொடர்பு கொள்வோர் ஒருவருக்கொருவர் அருகாமையில் உள்ளனர்; உடனடி பின்னூட்டம்

(C) குறைந்த அளவு பங்கேற்போர்; தொடர்பு கொள்வோர் ஒருவருக்கொருவர் அருகாமையில் உள்ளனர்; சில புலன் வழிகள்; உடனடி பின்னூட்டம்

(D) குறைந்த அளவு பங்கேற்போர்; தொடர்பு கொள்வோர் ஒருவருக்கொருவர் அருகாமையில் உள்ளனர்; பல புலன் வழிகள்; பின்னூட்டு பலநிலைகளில்

8. The Russian proverb “once a word goes out of your mouth, you can never swallow it again” points out

(A) Interpersonal communication is irreversible with long lasting effect

(B) If one opens one’s mouth, one cannot swallow

(C) Interpersonal communication is a one way process

(D) Words flow faster outward than inward

“வாயிலிருந்து வெளிவந்த சொற்களை விழுங்க முடியாது” என்ற ரஷ்யப் பழமொழியிலிருந்து அறிவது யாதெனில்

(A) நேரிடைத் தகவல் மாற்ற இயலாது மற்றும் நீண்ட தாக்கம் உடையது

(B) ஒருவர் வாயைத் திறந்திருந்த நிலையில் எதையும் விழுங்க முடியாது

(C) நேரிடைத் தகவல் ஒரு வழிச் செயல்பாடு

(D) சொற்கள் விரைவாக உள்வருவதை விட வெளிச் செல்கின்றன

9. What are ethical dilemmas faced while communicating?

(A) Secrecy and whistle – blowing

(B) Rumour and gossip

(C) Ambiguity and euphemism

(D) All the above

தகவல் பரிமாற்றத்தில் எதிர்நோக்கப்படும் நெறிநிலைக் குழப்பங்கள்

(A) இரகசியம் மற்றும் உண்மையை வெளிக் கொணர்தல்

(B) வதந்தி மற்றும் வம்புப் பேச்சு

(C) தெளிவற்ற நிலை மற்றும் சுற்றி வளைத்துப் பேசுதல்

(D) மேற்கூறிய அனைத்தும்

10. A man sold 10 eggs for Rs. 36 and thus gained 20% profit. At what price did he buy an egg?

(A) Rs. 2

(B) Rs. 3

(C) Rs. 4

(D) Rs. 5

ஒருவர், பத்து முட்டைகளை ரூ. 36 க்கு விற்றதில் 20% இலாபம் கிடைத்தது என்றால், அவர் ஒரு முட்டையை எந்த விலைக்கு வாங்கினார்?

(A) ரூ. 2

(B) ரூ. 3

(C) ரூ. 4

(D) ரூ. 5

11. What is the next number in the series 4, 6, 9, 13,.......

(A) 15

(B) 12

(C) 18

(D) 17

பின்வரும் தொடரில் அடுத்த எண் யாது? தொடராவது : 4, 6, 9, 13,......

(A) 15

(B) 12

(C) 18

(D) 17

12. If 3 apples and 4 oranges cost Rs. 100 and 4 apples and 3 oranges cost Rs. 110, find the cost of an orange?

(A) Rs. 11

(B) Rs. 8

(C) Rs. 12

(D) Rs. 10

மூன்று ஆப்பிள்கள் மற்றும் நான்கு ஆரஞ்சுகளின் விலை ரூ. 100 ஆகும். நான்கு ஆப்பிள்கள் மற்றும் மூன்று ஆரஞ்சுகளின் விலை ரூ. 110 ஆகும் என்றால், ஒரு ஆரஞ்சின் விலை எவ்வளவு?

(A) Rs. 11

(B) Rs. 8

(C) Rs. 12

(D) Rs. 10

13. A question with two statements is given below.

What is the price of tea?

Statement I : Price of coffee is Rs. 5 more than the price of tea

Statement II : Price of coffee is Rs. 5 less than that of a soft drink which is three times of the price of tea.

To answer the question :

(A) Statement I alone is enough and Statement II is not necessary

(B) Statement II alone is enough and Statement I is not necessary

(C) Both the Statements I and II are necessary

(D) Both the Statements I and II are not adequate

வினா ஒன்று இரு கூற்றுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

தேநீரின் விலை எவ்வளவு?

கூற்று I : குளம்பியின் (காபியின்) விலை தேநீரின் விலையை விட ரூ. 5 அதிகம்

கூற்று II : குளம்பியின் (காபியின்) விலை தேநீரின் விலையைப் போல் 3 மடங்குள்ள குளிர்பானத்தின் விலையிலிருந்து ரூ. 5 குறைவு.

வினாவிற்கான வினையைக் கண்டறிய

(A) கூற்று I மட்டுமே போதுமானது; கூற்று II தேவையில்லை

(B) கூற்று II மட்டுமே போதுமானது; கூற்று I தேவையில்லை

(C) கூற்று I மற்றும் II – இரண்டுமே தேவை

(D) கூற்று I மற்றும் II – இரண்டுமே போதுமானவை அல்ல

Answer the questions 14 – 18 based on the following information

J, K, L, M and N collected stamps. They collected a total of 100. None of them collected less than 10. No two among them collected the same number

I. J collected the same number as K and L put together

II. L collected 3 more than the cube of an integer

III. The number collected by J was the square of an integer

IV. The number collected by K was either the square or the cube of an integer

V. The numbers collected by M and N were in the ratio of 4 : 3

வினாக்கள் 14 – 18 –க்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் விடை தருக

J, K, L, M மற்றும் N ஆகிய ஐவரும் அஞ்சல் வில்லைகள் சேகரித்தனர். அவர்கள் சேகரித்த வில்லைகளின் மொத்த எண்ணிக்கை 100 ஆகும். 10 வில்லைகளுக்குக் குறைவாக எவரும் சேகரிக்க வில்லை. அக்குழுவில் எந்த இருவரும் ஒரே எண்ணிக்கையிலான வில்லைகளைச் சேகரிக்கவில்லை.

I. J சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை K மற்றும் L இருவரின் சேகரிப்பின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும்

II. L சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை ஒரு முழு எண்ணின் மும்மடிப் பெருக்கத்துடன் 3 கூடுதலாகும்

III. J சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை ஒரு முழு எண்ணின் வர்க்கமாகும்

IV. K சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை ஒரு முழு எண்ணின் வர்க்கத்திற்கோ அல்லது மும்மடிப் பெருக்கத்திற்கோ சமமாகும்

V. M மற்றும் N இருவர் சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கையின் விகிதம் 4 :3 ஆகும்.

14. The number collected by J was
   (A) 27
   (B) 49
   (C) 36
   (D) 64

   J சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை
   (A) 27
   (B) 49
   (C) 36
   (D) 64

15. The number collected by K was
   (A) 16
   (B) 27
   (C) 25
   (D) 36

   K சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கை
   (A) 16
   (B) 27
   (C) 25
   (D) 36

16. The Difference in the numbers collected by M and L was
   (A) 3
   (B) 2
   (C) 9
   (D) 5

   M மற்றும் L ஆகியோர் சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடு
   (A) 3
   (B) 2
   (C) 9
   (D) 5

17. The number/numbers of stamps collected by how many in the group was /were prime numbers?
   (A) 0
   (B) 1
   (C) 2
   (D) 3

   குழுவினர் சேகரித்த வில்லைகளின் எண்ணிக்கைகளில் எத்தனை எண்/எண்கள் பகா எண்கள் ஆகும்?
   (A) 0
   (B) 1
   (C) 2
   (D) 3

18. The numbers collected by which pair among the following together add up to the cube of an integer?

(A) K and L

(B) J and N

(C) M and N

(D) M and L

கொடுக்கப்பட்டுள்ள இணைகளில் எந்த இணை நபர்கள் சேகரித்த வில்லைகளின் மொத்த எண்ணிக்கை ஒரு முழு எண்ணின் மும்மடிப் பெருக்கத்திற்குச் சமம்?

(A) K மற்றும் L

(B) J மற்றும் N

(C) M மற்றும் N

(D) M மற்றும் L

19. ICT refers to

(A) Internet Communication Technology

(B) Information and Communication Technology

(C) International Communication Technology

(D) Instructional Communication Technology

ICT–இன் விரிவாக்கம்

(A) Internet Communication Technology

(B) Information and Communication Technology

(C) International Communication Technology

(D) Instructional Communication Technology

20. What is a blog?

(A) Online music

(B) Internet

(C) A personal or corporate website in the form of an online journal

(D) A personal or corporate Google search

வலைபூங்கா என்பது எது?

(A) நிகழ்நிலை இசை

(B) Internet

(C) மின்னிதழ் வடிவில் அமைந்த தனிநபர் அல்லது நிறுவன வலைமனை

(D) தனிநபர் அல்லது நிறுவன கூகுல் தேடல்

21. Which one of the following is an example of operating system?

(A) Microsoft Word

(B) Microsoft Excel

(C) Microsoft Windows

(D) Microsoft Access

கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று இயக்க அமைப்புக்கான எடுத்துக்காட்டு?

(A) மைக்ரோசாப்ட் வேர்டு

(B) மைக்ரோசாப்ட் எக்சல்

(C) மைக்ரோசாப்ட் விண்டோஸ்

(D) மைக்ரோசாப்ட் அக்ஸஸ்

22. One of the main essentials of Environmental Education for sustainable development is

(A) To live in harmony with nature

(B) To keep pace with times

(C) To exploit natural resources

(D) To achieve economic development

நிலைத்த வளர்ச்சிக்கு உதவும் சுற்றுப்புற சூழ்நிலைக் கல்வியின் இன்றியமையாத கூறுகளில் முக்கியமானதொன்று

(A) இயற்கையோடு இணக்கமாக வாழ்தல்

(B) கால ஓட்டத்தோடு ஓட்டி ஒழுகல்

(C) வன வளங்களை மிகுதியாக எடுத்தல்

(D) பொருளாதார வளர்ச்சியை அடைதல்

23. Environmental Education gained widespread attention after the United Nations Earth Summit (United Nations Conference on Environment and Development) in 1992 held at :

(A) Paris

(B) Rio de Jeneiro

(C) Geneva

(D) Rome

1992 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் உலக உச்சி மாநாட்டிற்குப் (ஐக்கிய நாடுகளின் சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் வளர்ச்சி மாநாடு) பிறகு சுற்றுப்புற சூழ்நிலைக்கல்வியானது பெருமளவு மக்களின் கவனத்தை ஈர்த்தது. இம்மாநாடு நிகழ்ந்த இடமாவது

(A) பாரிஸ்

(B) ரியோ டி ஜெனிரோ

(C) ஜெனிவா

(D) ரோம்

24. "Green peace" is

(A) An international NGO

(B) International peace accord

(C) International treaty on ocean dumping

(D) UN's environmental initiative

''கிரீன் பீஸ்'' என்பதாவது

(A) ஒரு பன்னாட்டு அரசு சாரா நிறுவனம்

(B) பன்னாட்டு அமைதி உடன்பாடு

(C) கடலில் வேண்டாதவைகளைக் கொட்டுதல் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம்

(D) ஐக்கிய நாடுகளின் சுற்றுப்புற சூழ்நிலை சீராக்க நடவடிக்கை

25. The employability of present day students can be greatly enhanced by

(A) Advanced equipment

(B) Interface with business organizations

(C) Development of soft skills

(D) In-take of bright students

இன்றைய மாணவர்களின் வேலைவாய்ப்புத்திறனைப் பெரிதும் மேம்படுத்துவது

(A) மேன்மையான கருவிகள்

(B) தொழில் நிறுவனங்களுடன் இணைவு

(C) மென்திறங்களை வளப்படுத்தல்

(D) அறிவார்ந்த மாணவர்கள் சேர்க்கை

26. Value Education stands for

(A) Making a student strong in subjects

(B) Enhancing student employability

(C) Inculcating virtues and culture to students

(D) Developing student personality

மதிப்புறு கல்வியாவது

(A) மாணவனைப் பாடங்களில் திறனுள்ளவானாக்கல்

(B) மாணவனின் வேலைவாய்ப்புத்திறம் உயர்த்தல்

(C) மாணவனுக்கு நன்னெறியும் பண்பாடும் ஊட்டல்

(D) மாணவனின் ஆளுமைத்திறனை மேம்படுத்தல்

27. If the main purpose of higher education is "grading and certification", then the examination system followed would be

(A) Formative examination

(B) Summative examination

(C) Semester examination

(D) Diagnostic test

"தகுதி மற்றும் சான்றிதழ்" வழங்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட உயர்கல்வி முறையில் பின்பற்றப்படும் தேர்வு முறையானது

(A) தொடர் தேர்வு முறை

(B) இறுதித் தேர்வு முறை

(C) பருவத் தேர்வு முறை

(D) குறையறி சோதனை

28. The main objective of teaching at higher education level is

(A) To prepare students to pass examination

(B) To develop the capacity to take decisions

(C) To give new information

(D) To motivate students to ask questions during lecture

உயர் கல்வி அளவில் கற்பித்தலின் முதன்மை நோக்கம்

(A) தேர்வில் வெற்றி பெற மாணவர்களைத் தயார் செய்தல்

(B) முடிவெடுக்கும் திறனை வளர்த்தல்

(C) புதிய தகவல்களை அளித்தல்

(D) விரிவுரையின் போது வினாத் தொடுக்க மாணவர்களை ஊக்கப்படுத்துதல்

29. The conventionally followed teaching method in higher education is

(A) Discussion method

(B) Lecture method

(C) Audio – Visual Aids

(D) Text book method

எந்தக் கற்பித்தல் முறை உயர்கல்வியில் வழக்கமாக பயன்படுத்தப்படுகிறது?

(A) விவாத முறை

(B) விரிவுரை முறை

(C) செவிப்புல கட்புல கருவிகள் முறை

(D) பாடப்புத்தக முறை

30. Which of the following is an instructional equipment?

(A) Overhead projector

(B) Audio casset

(C) Printed material

(D) Transparency sheets

பின்வருவனவற்றில் எது கற்பித்தல் கருவி ஆகும்?

(A) படத்தாள் கருவி

(B) ஒலி நாடா

(C) அச்சிடப்பட்ட பாடம்

(D) படத்தாள்

31. What is a period in writing?

(A) It is a stretch of time with a beginning and an end

(B) It refers to a particular slot of time

(C) A punctuation mark appearing at the end of a sentence

(D) A symbol in writing which separates the main clause from a subordinate clause in a sentence

எழுதும் எழுத்தில் முற்றுப்புள்ளி என்பது யாது?

(A) ஆரம்பம் மற்றும் முடிவுள்ள ஒரு குறிப்பிட்ட காலமாகும்

(B) அது ஒரு குறிப்பிட்ட காலமாகும்

(C) ஒரு சொற்றொடரின் கடைசியில் இருக்கும் குறியீடு

(D) ஒரு சொற்றொடரில் உள்ள முதன்மை மற்றும் சார்புச் சொற்றொடர்களைக் காட்டும் குறியீடு

32. The term, browsing in reading means

(A) To collect information

(B) To make desultory reading

(C) To read here and there in books

(D) To read from the computer screen

வாசிக்கும்போது, நுனிப்புல் மேய்தல் என்றால் என்ன பொருள்?

(A) தகவலைச் சேகரித்தல்

(B) குறிக்கோளற்றுப் படித்தல்

(C) ஒரு புத்தகத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் படித்தல்

(D) கணினியின் திரையிலிருந்து படித்தல்

33. What is working bibliography?

(A) It is a list of books and other sources a researcher wishes to read for the thesis

(B) It is a list of books referred to by a researcher in the thesis

(C) It is a list of books which are considered major sources in research reading

(D) It is a list of books which are considered associated sources in research reading

பயன்பாட்டு நூற்பட்டியல் என்றால் என்ன?

(A) தனது ஆய்வுக் கட்டுரைக்காக ஓர் ஆராய்ச்சி மாணவர் படிக்க இருக்கும் நூற்பட்டியல் மற்றும் பிற மூலங்கள்

(B) ஓர் ஆராய்ச்சி மாணவர் தனது கட்டுரையில் பயன்படுத்தும் நூற்பட்டியல்

(C) ஆராய்ச்சிக்காக ஒரு மாணவர் பயன்படுத்தும் முதன்மை நூல் ஆதார மூலங்களின் பட்டியல்

(D) ஆராய்ச்சிக்காக ஒரு மாணவர் பயன்படுத்தும் சார்பு நூல் ஆதார மூலங்களின் பட்டியல்

Read the following passage and answer the six of the following questions given below :

The great advantage of early rising is the good start it gives us in our day's work. The early riser has done a large amount of hard work before other men have got out of bed. In the early morning the mind is fresh, and there are few sounds or other distractions, so that the work done at the time is generally well done. In many cases the early riser also finds time to take some exercise in the fresh morning air, and this exercise supplies him with a fund of energy that will last until the evening. By beginning so early, he knows that he has plenty of time to do thoroughly all the work he can be expected to do, and is not tempted to hurry over any part of it.All his work being finished in good time, he has a long interval of rest in the evening before the timely hour when he goes to bed. He gets to sleep several hours before midnight, at the time when sleep is most refreshing, and after a sound night's rest rises early next morning in good health and spirits for the labours of a new day.

It is very plain that such a life as this is far more conducive to health than that of the man who shortens his waking hours by rising late, and so can afford in the course of the day little leisure for necessary rest. Anyone who lies in bed late, must, if he wishes to do a full day's work, go on working to a correspondingly late hour, and deny himself the hour or two of evening exercise that he ought to take for the benefit of his health. But in spite of all his efforts, he will probably not produce as good results as the early riser, because he misses the best working hours of the day.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்திகளைப் படித்து அதினிலிருந்து பின்வரும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் :

வைகறை துயில் எழுவதென்பது நமக்கு மிகப்பெரிய பயனைத் தரவல்லது. அதாவது, நமது அன்றாடப் பணியினை செவ்வனே தொடங்கலாம். வைகறை துயில் எழுபவர் தாமதமாக எழுபவர்களை விட அதிகமான பணியினை செய்து முடிப்பர். அதிகாலைப் பொழுதில் மனது புத்துணர்வோடு இருக்கும். மேலும் இரைச்சலும் ஏனைய எண்ணச் சிதறல்களும் குறைவாக இருக்கும். எனவே, அந்நேரத்தில் மேற்கொள்ளப்படும் பணி சிறப்பாக அமையும். பெரும்பாலும், அதிகாலையில் எழுபவர்கள், தூய்மையான காற்றில் உடற்பயிற்சி செய்வதற்கு தேவையான நேரத்தினைப் பெறுகின்றனர். அந்த உடற்பயிற்சியானது அன்றாடப் பணியினைச் செய்வதற்கு சிறந்த சக்தி, புத்துணர்வினை மாலைவரை தருகின்றது. வைகறை துயில் எழுவதன் மூலம், தான் செய்ய வேண்டிய பணியினை செவ்வனே செய்வதற்கு, ஒரு மனிதனுக்கு அதிகமான நேரம் கிடைக்கின்றது. அதன் காரணமாக, அவசரகதியில் பணியை முடிக்க வேண்டும் என்ற அபத்தமான ஆசைக்கு இடமில்லாமல் போகின்றது. இவ்வாறு நேரப்படி பணி செய்வதன் மூலம், அம்மனிதனுக்கு மாலையில் சற்று ஓய்வு கிடைக்கின்றது, எனவே மனநிறைவோடு இரவு உறங்கச் செல்கின்றார். முன்னிரவுத் தூக்கம் புத்துணர்ச்சி அளிக்கவல்லது. அப்படிப்பட்ட தூக்கத்தினை, வைகறை துயில் எழுபவர் பெறுகின்றார். அதன் காரணமாக, மறுநாள் காலையில் எழும்போது புத்துணர்ச்சியோடும், புத்தாக்கத்தோடும், பணியினைத் தொடங்குகின்றார்.

அதிக நேரம் தூங்குபவரைக் காட்டிலும், அளவோடு தூங்கி அதிகாலை எழுபவருக்கு உடல் நலம் சிறப்பாக அமையும். இரவு அதிக நேரம் தூங்குபவருக்கு பகற்பொழுது ஓய்வெடுக்க நேரம் அமையாது. தாமதமாக விழித்து எழுபவருக்கு, அன்றைய பணியினை முழுவதுமாக செய்து முடிப்பதற்காக, ஓய்வில்லாமல், பகல் முழுவதும் அதிக நேரம் பணி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆதலால் அவர், மாலை உடற்பயிற்சி செய்யும் நேரத்தினை இழக்கின்றார். அதன் காரணமாக உடல் ஆரோக்கியம் குறைகின்றது. சிறந்த முயற்சி செய்தபோதும், தாமதமாகத் துயில் எழுபவர், இரவு நன்கு உறங்கிப் பணி செய்பவர்போலச் சிறப்பாக செயல்பட முடிவதில்லை. ஏனெனில், பகலில் நன்கு பணி செய்யும் நேரத்தினை, தாமதமாகத் துயில் எழுவதன் மூலம் இழக்கின்றார்.

34. Why is work done in the early morning well done?
   (A) There is no tension in man
   (B) The mind is fresh and almost free from sounds and distractions
   (C) The mind is receptive
   (D) The morning air contains lot of oxygen

   அதிகாலையில் செய்யும் பணி ஏன் சிறப்பாக அமைகின்றது?
   (A) மனிதனிடத்தில் படபடப்பு இல்லை
   (B) மனது புத்துணர்ச்சியோடு, எண்ணச் சிதறல் மற்றும் திசை திருப்பும் சப்தங்கள் இல்லாமல் இருக்கின்றது
   (C) மனதானது எதையும் எளிதாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளது
   (D) வைகறையில் உயிர்க் காற்று நிரம்பியுள்ளது

35. What enables the early riser to go to bed at the proper time?
   (A) Early dinner helps him to go to sleep early
   (B) General tiredness makes him start sleeping early
   (C) Free-minded mood brings him sleep
   (D) Completion of the day's work and along interval of rest make him sleep early

   வைகறை துயில் எழுபவருக்கு சரியான நேரத்தில் உறங்கச் செல்ல எது காரணமாகின்றது?
   (A) முன்னிரவே உண்ணும் உணவானது, விரைவாக உறக்கத்தினை வரவழைக்கின்றது
   (B) களைப்பின் காரணமாக விரைவில் உறங்கச் செல்கின்றார்
   (C) மனது லேசாக இருப்பதன் காரணமாக உறக்கம் வருகின்றது
   (D) நேரத்தில் பணியை முடிப்பதாலும், பிற்பகலில் ஓய்வு எடுப்பதாலும் விரைவாக மனிதனுக்கு உறக்கம் வருகின்றது

36. Why is the late riser unable to do his work properly?
   (A) He feels sleepy and fails to concentrate on work
   (B) Late hour work dampens his work
   (C) Lack of leisure for rest and evening exercise affect him
   (D) Fatigue impedes his work

   தாமதமாகத் துயில் எழுபவரால், ஏன் பணியைச் சரியாக செய்ய முடிவதில்லை?
   (A) தூக்கக் கலக்கம் காரணமாக பணியில் கவனம் செலுத்த முடிவதில்லை
   (B) கால தாமதத்தால் தேங்கும் வேலைப்பளு மனிதனின் உற்சாகத்தினை இழக்கச் செய்கின்றது
   (C) ஓய்வின்மை மற்றும் மாலைப்பொழுது உடற்பயிற்சியின்மை ஒருவரின் பணியைக் செவ்வனே செய்ய விடாமல் தடுக்கின்றது
   (D) களைப்பு, பணியில் இடர்பாட்டினை உண்டாக்குகின்றது

37. Of the following sleep – time – slots, which is most refreshing?
   (A) At midnight
   (B) Before midnight
   (C) After midnight
   (D) Early in the morning

   எந்த நேரத்தில் மேற்கொள்ளும் உறக்கம் அதிகமான புத்துணர்ச்சியைத் தருகின்றது?
   (A) நள்ளிரவு
   (B) முன்னிரவு
   (C) பின்னிரவு
   (D) வைகறை

38. The term, "Conducive" means

(A) Comfortable

(B) Likely to produce

(C) Conduction

(D) Connectivity

"சிறப்பாக அமையும்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) வசதியான

(B) உருவாக வாய்ப்பாகும்

(C) சக்தி கடத்துதல்

(D) தொடர்பு

39. What happens to the early riser in the hours before midnight?

(A) He gets dreams

(B) He speaks to God

(C) He gets sound sleep

(D) He prepares himself for the next day's work

வைகறை துயில் எழுபவருக்கு முன்னிரவில் என்ன ஏற்படுகிறது?

(A) கனவு காண்கிறார்

(B) கடவுளிடம் பேசுகின்றார்

(C) ஆழ்ந்த உறக்கம் ஏற்படுகின்றது

(D) மறுநாள் பணிக்கு தன்னை ஆயத்தம் செய்து கொள்கின்றார்

40. Feedback is necessary in effective communication because

(A) It provides continuity to dialogue

(B) It inspires the sender to speak more

(C) It tells the sender whether the receiver has understood the message

(D) It shows the receiver's intellectual capability

தகவல் தொடர்பில் பின்னூட்டு என்பது

(A) பேச்சாற்றலுக்கு தொடர்ச்சியை அளிக்கிறது

(B) அனுப்புநரை அதிகம் பேசத் தூண்டுகிறது

(C) பெறுநர் செய்தியை அறிந்து கொண்டாரா என அனுப்புநருக்கு தெரிவிக்கிறது

(D) பெறுநரின் அறிவாற்றலை புலப்படுத்துகிறது

41. The main limitation of oral communication is

(A) That it may degenerate into directionless conversation

(B) That it may take up too much time

(C) That it cannot be used as a record for future reference

(D) That it needs people to come face to face with each other

வாய்மொழித் தகவலின் முக்கிய குறைபாடு யாதெனில்

(A) அது நோக்கமற்ற உரையாடலில் பயனற்று முடியும்

(B) அது அதிக அளவு நேரத்தை எடுத்துக் கொள்ளும்

(C) எதிர் காலக் குறிப்புக்கு ஆவணமாக அமையாது

(D) மனிதர்கள் நேருக்குநேர் உரையாட அது வழிவகுக்கும்

42. What is whistle – blowing?
(A) Going public about abuses
(B) A business dealing in whistles
(C) Blowing whistle as a signal
(D) Dealing with publicly known facts

'ஊதல் – ஊதுதல்' என்பது
(A) தவறுகளை வெளிக் கொணர்தல்
(B) ஊதலில் செய்யப்படும் வாணிகம்
(C) அடையாளமாக ஊதல் ஊதுதல்
(D) வெளியில் தெரிந்த உண்மைகளைக் கூறுதல்

43. A philanthropic organization donated Rs. 28,000 in such a way that each girl received Rs. 2,000 and each boy Rs. 1,000. If the number of boys is less than that of girls by 2, find the number of boys.
(A) 8
(B) 15
(C) 10
(D) 28

ஓர் தொண்டு நிறுவனம் நன்கொடையாக வழங்கிய ரூ. 28,000–தில், ஒவ்வொரு சிறுமிக்கும் கிடைத்தது ரூ. 2,000. ஒவ்வொரு சிறுவனுக்கும் கிடைத்தது ரூ. 1,000. சிறுவர்களின் எண்ணிக்கை சிறுமிகளின் எண்ணிக்கையை விட 2 குறைவு எனில், சிறுவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
(A) 8
(B) 15
(C) 10
(D) 28

44. A student was asked to add 16 to a number and subtract 10 from it. He by mistake subtracted 16 and added 10 and arrived at the answer 32. What is the right answer?
(A) 20
(B) 26
(C) 44
(D) 32

ஒரு எண்ணுடன் 16 என்ற எண்ணைக் கூட்டி, 10 என்ற எண்ணைக் கழிக்குமாறு ஒரு மாணவர் பணிக்கப்பட்டார். ஆனால், அந்த மாணவர் தவறுதலாக 16 என்ற எண்ணைக் கழித்து, 10 என்ற எண்ணைக் கூட்டி, விடை 32 என்று கூறினார் என்றால், கீழ்கண்டவற்றுள் எது சரியான விடை?
(A) 20
(B) 26
(C) 44
(D) 32

45. A student attempted 116 questions in an examination. In this examination, every wrong answer was given 1/3 minus mark and every right answer was given 1 mark. If the student scored zero mark, how many wrong answers were given by him?
(A) 29
(B) 58
(C) 87
(D) 100

தேர்வில் ஒரு மாணவர் 116 வினாக்களுக்குப் பதில் அளித்தார். அந்தத் தேர்வில், ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கித், தவறான விடை ஒவ்வொன்றுக்கும் 1/3 மதிப்பெண் கழிக்கப்பட்டது. அந்த மாணவர் பெற்ற மதிப்பெண் பூஜ்யம் என்றால், எத்தனை தவறான விடைகள் வழங்கி இருப்பார்?
(A) 29
(B) 58
(C) 87
(D) 100

Read the following information carefully and answer the questions below from 46 – 51 :

Six professors P, Q, R, S, T and U have to present research papers on their subjects, namely, services marketing, consumer behaviour, rural marketing, brand management, experimental marketing and industrial marketing. One professor will present his paper and findings only one day. Presentations will start from Monday and will end on Sunday. There will be a day for rest.

(i) Services marketing will immediately follow experimental marketing

(ii) P, who teaches industrial marketing, will present either on the second or last day

(iii) R will present on the third day, Brand management will be on the fifth day

(iv) T, professor of consumer behaviour, presents on the second day

(v) Q has presented on Monday, and the rest day will be immediately after U's presentation

பின்வரும் தகவலைக் கவனமாகப் படித்து அடியிற்கண்ட வினாக்கள் 46–51க்கு விடையளிக்கவும்.

P, Q, R, S, T மற்றும் U ஆகிய ஆறு பேராசிரியர்கள் தத்தம் பாடங்களில் ஆய்வுக் கட்டுரைகளை வழங்க இருக்கிறார்கள். அவர்தம் பாடங்கள் சேவைச் சந்தையிடல், நுகர்வோர் நடத்தை, ஊரகச் சந்தையிடல், குறியீடு மேலாண்மையியல், சோதனைச் சந்தையிடல் மற்றும் தொழில் சந்தையிடல் ஆகியவை ஆகும். ஒரு பேராசிரியர் தனது ஆய்வுக் கட்டுரையையும் ஆய்வு முடிவுகளையும் ஒரேயொரு நாளில் மட்டும் வழங்குவர். கட்டுரைகள் வழங்கப்பெறுவது திங்கட்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை முடிவுறும். ஒரு நாள் ஓய்வு விடப்படும்.

(i) சோதனைச் சந்தையிடலைத் தொடர்ந்து உடன் வருவது சேவைச் சந்தையிடல்

(ii) தொழில் சந்தையிடலை கற்பிக்கும் P, இரண்டாம் நாள் அல்லது இறுதி நாளில் கட்டுரை வழங்குவார்

(iii) மூன்றாம் நாளில் R கட்டுரை வழங்குவார். குறியீடு மேலாண்மை ஐந்தாம் நாளில் இடம் பெறும்

(iv) நுகர்வோர் நடத்தைப் பேராசிரியர் T இரண்டாம் நாளன்று கட்டுரை வழங்குகிறார்

(v) திங்கட்கிழமை Q கட்டுரை வழங்கினார். U கட்டுரை வழங்குவதைத் தொடர்ந்து உடன் வருவது ஓய்வு நாளாக அமையும்.

46. Which day is the rest day?
(A) Sunday
(B) Saturday
(C) Monday
(D) Thursday

ஓய்வு நாள் எது?
(A) ஞாயிற்றுக்கிழமை
(B) சனிக்கிழமை
(C) திங்கட்கிழமை
(D) வியாழக்கிழமை

47. When will be the presentation on rural marketing?
(A) Sunday
(B) Monday
(C) Tuesday
(D) Wednesday

ஊரகச் சந்தையிடல் கட்டுரை வழங்கப் பெறுவது எப்போது?
(A) ஞாயிற்றுக்கிழமை
(B) திங்கட்கிழமை
(C) செவ்வாய்க்கிழமை
(D) புதன்கிழமை

48. Who will present just after Q and just before R?

(A) S

(B) T

(C) P

(D) U

Q ஐ உடனே தொடர்ந்தும், R க்குச் சற்றே முன்னதாகவும் வழங்க இருப்பது யார்?

(A) S

(B) T

(C) P

(D) U

49. Services marketing is immediately succeeded by which topic

(A) Consumer behaviour

(B) Rural marketing

(C) Industrial marketing

(D) Brand management

சேவைச் சந்தையினை உடன் தொடர்ந்து வரும் தலைப்பு யாது?

(A) நுகர்வோர் நடத்தை

(B) ஊரகச் சந்தையிடல்

(C) தொழில் சந்தையிடல்

(D) குறியீடு மேலாண்மையியல்

50. Who is the professor of brand management?

(A) P

(B) Q

(C) U

(D) S

குறியீடு மேலாண்மையியல் பேராசிரியர் யார்?

(A) P

(B) Q

(C) U

(D) S

51. Who presents the research paper on industrial marketing?

(A) S

(B) Q

(C) P

(D) U

தொழில் சந்தையிடல் குறித்த ஆய்வுக் கட்டுரையை வழங்குபவர் யார்?

(A) S

(B) Q

(C) P

(D) U

52. HTML stands for

(A) Hyper Text Manipulation Language

(B) Hyper Text Mark-up Language

(C) Hyper Text Managing Links

(D) Hyper Text Manipulation Links

HTML –இன் விரிவாக்கம்

(A) Hyper Text Manipulation Language

(B) Hyper Text Mark-up Language

(C) Hyper Text Managing Links

(D) Hyper Text Manipulation Links

53. Virtual memory is

(A) a form of ROM

(B) a form of RAM

(C) a secondary memory

(D) a coprocessor

மெய் நிகர் நினைவகம் என்பது

(A) ஒரு வகை ROM

(B) ஒரு வகை RAM

(C) துணை நிலை நினைவகம்

(D) இணைச் செயலி

54. Assertion I : In computer any language other than the machine language is called pseudo language

Assertion II : The computers can understand only the machine language directly.

(A) Assertion I is true, but Assertion II is false

(B) Assertion I is false, but Assertion II is true

(C) Both the Assertion I and II are true

(D) Both the Assertion I and II are false

தீர்வு I : கணினியில் எந்திர மொழி தவிர வேறு எந்த ஒரு மொழியையும் போலிமொழி எனலாம்

தீர்வு II : கணினி எந்திர மொழியை மட்டுமே நேரடியாகப் புரிந்துகொள்ள வல்லது

(A) தீர்வு I சரி, ஆனால் தீர்வு II தவறு

(B) தீர்வு I தவறு, ஆனால் தீர்வு II சரி

(C) தீர்வு I மற்றும் II – இரண்டுமே சரி

(D) தீர்வு I மற்றும் II – இரண்டுமே தவறு

55. Which of the following is called, "The Great Charter of Indian Education "?

(A) Butler Commission Report

(B) Calcutta University Commission Report

(C) Lord Macaulay's Minutes (1835)

(D) Gajendragadkar Committee Report

கீழுள்ளவற்றில் எது "இந்தியக் கல்வியின் மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது?

(A) பட்லர் குழு அறிக்கை

(B) கல்கத்தா பல்கலைக்கழகக் குழு அறிக்கை

(C) மெக்காலே பிரபுவின் குறிப்புகள் (1835)

(D) கஜேந்திரகட்கர் குழு அறிக்கை

56. Navodaya Vidyalayas are opened for

(A) Rural students

(B) Rural talented students

(C) Urban students

(D) Orphans

நவோதயா கல்விக் கூடங்கள் இவர்களுக்கெனத் தொடங்கப்பட்டது

(A) ஊரக மாணவர்களுக்கு

(B) ஊரக திறமைமிக்க மாணவர்களுக்கு

(C) நகர மாணவர்களுக்கு

(D) ஆதரவற்றோர்க்கு

57. The assessment and accreditation of all technical institutions is done by

(A) NAAC

(B) AICTE

(C) NCTE

(D) NBA

அனைத்து தொழிற்கல்வி நிறுவனங்களுக்கான தர நிர்ணயமும் சான்றளிப்பும் செய்யும் நிறுவனமாவது

(A) NAAC

(B) AICTE

(C) NCTE

(D) NBA

58. Human activities such as the burning of fossil fuels and indiscriminate felling of trees are very harmful to :

(A) Vegetation

(B) Animal life

(C) Ecosphere

(D) Water bodies

இயற்கை எரிபொருள்களைப் பெருமளவு பயனீடு செய்தலும், கண் மூடித்தனமாக மரங்களை வெட்டுதலுமான மனித செயல்களால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாவதாவது

(A) தாவர இனம்

(B) விலங்கினம்

(C) சுற்றுப்புற அண்ட வெளி

(D) நீர் நிலைகள்

59. One of the worst impurities that influences the safety of the drinking water resource is :

(A) Barks of trees

(B) Marine objects

(C) Micro-organisms

(D) Insects

குடிநீர் ஆதாரங்களின் பாதுகாப்பைப் பெரிதும் குலைக்கும் மோசமான மாசுகளில் ஒன்றாவது

(A) மரங்களின் பட்டைகள்

(B) நீர் வாழ் உயிரினங்கள்

(C) நுண்ணுயிர்கள்

(D) பூச்சிகள்

60. Which of the following natural resources is non-renewable?

(A) Minerals and fossil fuels

(B) Flora and fauna

(C) Fresh water

(D) Fertile agricultural soil

கீழுள்ள இயற்கை வளங்களில் மீண்டும் புதுப்பிக்க முடியாதது?

(A) கனிமங்களும் இயற்கை எரிபொருள்களும்

(B) மரவிடையும் மாவிடையும்

(C) நன்னீர்

(D) வளமான வேளாண்மை நிலம்

GENERAL

PAPER – 1 A- SET KEY SET 2012

1	C	16	D	31	C	46	B
2	D	17	B	32	C	47	B
3	D	18	D	33	A	48	B
4	D	19	B	34	B	49	D
5	B	20	C	35	D	50	C
6	B	21	C	36	C	51	C
7	B	22	A	37	B	52	B
8	A	23	B	38	B	53	B
9	D	24	A	39	D	54	C
10	B	25	C	40	C	55	C
11	C	26	C	41	C	56	B
12	D	27	B	42	A	57	D
13	C	28	B	43	A	58	C
14	C	29	B	44	C	59	C
15	C	30	A	45	C	60	A